# எஸ்.ஐ.ஆர். பணிகளில் பம்பரம் போல் சுழன்று பணியாற்றும் கழகத்தினர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை...! முதல் பக்கத் தொடர்ச்சி!

கட்டமைப்பு முறையாக அமைந்திருக்கின்ற காரணத்தால் அந்த பணிகளை வெற்றிகரமாக நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்று பெருமையோடு குறிப்பிட்டுச் சொன்னார். உண்மைதான். அந்த SIR பணிகளை இன்றைக்கு பம்பரம் போல் நம்முடைய தோழர்கள் செய்துகொண்டிருக்கும் காட்சி யைப் பார்த்து எல்லோரும் அதை குறிப்பிட்டு சொல்கிறார்கள். பெருமைப்படுகிறார்கள். எதற்கு என்றால், நம்முடைய வாக்குரிமையை நாம் காப்பாற்றியாக வேண்டும். விழிப்போடு நாம் வேலைகளை பார்த்திருக்கிறோம். ஆனால், அதே நேரத்தில் பாதி வேலைகள்தான் முடிவுற்றிருக்கிறது. இன்னும் பாதி வேலைகள் இருக்கிறது.

தேர்தல் நடந்து, வாக்கு எண்ணிக்கை முடிந்து, முடிவு அறிவிக்கும் வரை நமக்கு வேலை இருக்கிறது. நீங்கள் மறந்துவிடக் கூடாது. இரண்டு வாரத்தில் டிசம்பர் முடிந்து ஜனவரி 1ஆம் தேதி புத்தாண்டு வரப்போகிறது. அதற்குப்பிறகு, தேர்தலுக்கு சிறிது நாட்கள்தான் இருக்கிறது. அதனால் நான் உங்களையெல்லாம் கேட்டுக்கொள்ள விரும்புவது நம்முடைய சாதனைகள், திட்டங்கள், நாம் ஆற்றக் கூடிய பணிகள் மக்களுக்கு சென்றடைந்திருக்கிறது. அதை நான் மறுக்கவில்லை. முழுவதுமாக அதை நாம் கொண்டு சேர்க்க வேண்டும்.

ஆனால், என்னதான் சென்றடைந் திருந்தாலும் இங்கு நம்முடைய தொல்.திருமாவளவன் அவர்கள் குறிப்பிட்டதை போல், இன்றைக்கு எதிரிகள் நம்மை வீழ்த்த வேண்டும் என்று நினைக்கக்கூடியவர்கள் எவ்வளவுதான் அந்த பணியில் ஈடுபட்டாலும் நாம் ஏமாந்துவிடக்கூடாது என்ற அடிப்படையில் அவர் குறிப்பிட்டுச் சொன்னார். உண்மைதான்.

**7-ஆவது முறையாகவும் திராவிட மாடல் ஆட்சி தொடரும்!**

நம்முடைய சாதனைகளை, திட்டங்களை வீடு வீடாக சென்று மக்களிடத்தில் எடுத்து செல்லக்கூடிய அந்த பணிகளில் ஈடுபட்டு அவையெல்லாம் வாக்குகளாக மாற்ற வேண்டும், ஏழாவது முறையாக திராவிட மாடல் ஆட்சி உருவாகியிருக்கிறது என்ற பெருமை நமக்கு வந்தாக வேண்டும். தமிழ்நாட்டின் வளர்ச்சி தொடர வேண்டும். அதில் உங்கள் எல்லோருடைய பங்கும் அதில் நிச்சயமாக இருக்க வேண்டும்.

நம்முடைய பழனியப்பன் அவர்களைப் பற்றி நான் சொல்லவேண்டும் என்று சொன்னால், அவர் முன்னாள் அமைச்சராக இருந்தவர். உங்களுக்கெல்லாம் நன்கு அறிமுகமானவர். அவரைப்பற்றி நான் அதிகமாக உங்களிடத்தில் எடுத்துச்சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. காரணம், அவர் ஆற்றக்கூடிய பணிகளையெல்லாம் நீங்கள் அறிந்தவர்கள். என்னைப்பொறுத்த வரை, அவர் அ.தி.மு.க.வில் இருந்தபோது அமைச்சராக பொறுப் பேற்று பணியாற்றியபோது நாங்களெல்லாம் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருப்போம். அவர் ஆளுங்கட்சி வரிசையில் அமைச்சராக சட்டமன்றத்தில் அமர்ந்திருப்பார். அப்படி அமர்ந்திருக்கும்போது ஒவ்வொரு அமைச் சருக்கும் துறையின் சார்பில் மானியக் கோரிக்கையை சட்டமன்றத்தில் தாக்கல் செய்து, அந்த அவையில் அதுகுறித்து பேசிய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பதில் சொல்லும் வகையில் ஆளுங்கட்சியின் அமைச்சர்கள் பொறுப்பாக பதில் சொல்ல வேண்டும். ஆனால், அ.தி.மு.க.வைச் சார்ந்த எந்த அமைச்சர்களும் பொறுப்பாக இவரைப்போல் பதில் சொன்னது இல்லை.

அதுமட்டுமல்ல. மற்ற அமைச்சர்க ளெல்லாம் பதில் சொல்லும்போது நாங்க ளெல்லாம் பாதியில் எழுந்து வெளியே சென்றுவிடுவோம். ஏனென்றால், அந்த அளவிற்கு வாய்க்கு வந்தபடியெல்லாம் பேசு வார்கள். யேசுவார்கள். விமர்சனம் செய்வார் கள். விமர்சனம் செய்யட்டும் வேண்டாம் என்று சொல்லவில்லை. குறைகளை சொல்லட்டும். தவறில்லை. தனிப்பட்ட முறையில் தாக்கி பேச ஆரம்பித்துவிடுவார்கள். ஆனால், பழனியப்பன் அவர்கள் பதில் சொல் கிறார் என்றால், நாங்கள் அத்தனை பேரும் சட்டமன்றத்தில் உட்கார்ந்திருப்போம். நானே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களிடம் சொல்வேன். பழனியப்பன் அவர்கள் பதில் சொல்லப்போகிறார். நாம் யாரும் வெளியே செல்ல வேண்டாம். உட்காருவோம் என்று நான் சொல்வேன். அந்தளவுக்கு கண்ணியத்தோடு ஜனநாயக மாண்பை பாதுகாத்தவர் நம்முடைய பழனியப்பன் என்று சொன்னால், அது நிச்சயம் மிகையாகாது.

அதனால்தான், அவர் கழகத்தில் வந்து சேர்ந்தவுடனே அவரை வரவேற்றபோது நான் சொன்னேன். உங்களிடத்தில் எனக்கு பிடித்தது, சட்டமன்றத்தில் யாரையும் விமர்சனம் செய்யாமல் கடமையோடு நீங்கள் அந்த பணியை நிறைவேற்றினீர்கள். அதுதான் மிகவும் பிடிக்கும் என்று வெளிப்படையாக சொன்னேன். அதைதான், அவர் கட்சியில் சேர்ந்தற்குப் பிறகு கழக தோழர்களிடத்தில், பொதுமக்களிடத்தில், கட்சி நிருவாகிகளிடத்தில் இன்றைக்கும் அந்த முறையை கடைபிடித்து வருவதை பார்க்கும்போது உள்ளபடியே நான் பெருமைப்படுகிறேன். மகிழ்ச்சி அடைகிறேன். அவருடைய இல்லத்திருமணத்தில் நடைபெறக்கூடிய இந்த மணவிழா நிகழ்ச்சியில் கலந்துகொண்டதற்கு நான் பெருமைப்படுகிறேன்.

இன்றைக்கு மணக்கோலம் பூண்டிருக்கும் மணமக்கள் எல்லா வளங்களையும் பெற்று சிறப்போடு வாழ வேண்டும் என்று நான் வாழ்த்துகிறேன். புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் சொன்னதுபோல், வீட்டுக்கு விளக்காக, நாட்டுக்குத் தொண்டர்களாக இருந்து வாழுங்கள்! மணக்கோலம் பூண்டிருக்கும் மணமக்கள் வாழ்க. வாழ்க.. வாழ்க... என்று வாழ்த்துகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

### பழனியப்பன் ஜனநாயக மாண்பைக் காத்தவர்!



**பழனியப்பன் அவர்கள் பதில் சொல்கிறார் என்றால்,நாங்கள்அத்தனைபேரும்சட்டமன்றத்தில் உட்கார்ந்திருப்போம். நானே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களிடம் சொல்வேன். திரு. பழனியப்பன் அவர்கள் பதில் சொல்லப்போகிறார். நாம் யாரும் வெளியே செல்ல வேண்டாம். உட்காருவோம் என்று நான் சொல்வேன். அந்தளவுக்கு கண்ணியத்தோடு ஜனநாயக மாண்பை பாதுகாத்தவர் நம்முடைய பழனியப்பன்!**

---

## அரியலூர் மாவட்டத்தில்

# கலைஞர் மகளிர் உரிமைத் தொகை 2 வது கட்ட விரிவாக்கம் விழா!

### அமைச்சர் சா.சி.சிவசங்கர் பங்கேற்பு!

அரியலூர், டிச, 15 –

அரியலூர் மாவட்டம், வாலாஜாநகரம் அன்னலட்சுமி ராஜபாண்டியன் திருமண மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவின் காணொளிக் காட்சி நேரலை ஒளிபரப்பு நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்துகொண்டு 16,525 மகளிருக்கு கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கான வங்கி பற்று அட்டைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் பொ.இரத்தினசாமி, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மகளிரின் நலன் காத்து அவர்களது உரிமைகளை நிலைநாட்டும் வகையில் பல்வேறு திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில் தகுதிவாய்ந்த குடும்பத் தலைவிகளுக்கு கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத் தில் மாதம் ரூ.1,000 வழங்கப்படும் என்ற சிறப்பு மிக்க திட்டத்தின் முதற்கட்டம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண் டான 2023 ஆம் ஆண்டில், தாய் தமிழ்நாட்டின் தலைமகன் பேரறிஞர் பெருமகன் அறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் மாதம் 15 நாளன்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. அதன்படி அரியலூர் மாவட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக 1,57,494 மகளிருக்கு உரிமைத்தொகை வழங்கப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக இன்றையதினம் முதலமைச்சர் அவர்கள் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் 2 ஆவது கட்ட விரி வாக்கத்தினை தொடங்கி வைத்ததை தொடர்ந்து, வாலாஜாநகரம் ஊராட்சி, அன்னலட்சுமி ராஜபாண்டியன் திருமண மண்டபத்தில் கலைஞர் மகளிர் உரிமை திட்டம் விரிவாக்கத்தினை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்து 16,525 மகளிருக்கு கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கான வங்கி பற்று அட்டைகளை வழங்கினார்.

அதன்படி அரியலூர் மாவட்டத்தில் இரண்டாம் கட்டமாக உங்களுடன் ஸ்டாலின் முகாம்களில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைக்காக பெறப்பட்ட விண்ணப்பங்களில் 16,525 விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டு கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் 2ஆவது கட்ட விரிவாக்கத் தின் கீழ் மாதந்தோறும் ரூ.1000 வீதம் அரியலூர் வட்டத்தில் 6,148 பயனாளிகளுக்கு ரூ.61,48,000 மதிப்பிலும், உடையார்பாளையம் வட்டத்தில் 5,906 பயனாளிகளுக்கு ரூ.59,06,000 மதிப்பிலும், செந்துறை வட்டத்தில் 2,115 பயனாளிகளுக்கு ரூ.21,15,000 மதிப்பிலும், ஆண்டிமடம் வட்டத்தில் 2,356 பயனாளிகளுக்கு ரூ.23,56,000 மதிப்பிலும் என மாதம் ஒன்றுக்கு ரூ.1000 வீதம் 16,525 பயனாளிகளுக்கு ரூ.1,65,25,000 வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் 2ஆவது கட்ட விரிவாக்கத்தின் கீழ் மகளிருக்கு வங்கிப் பற்று அட்டைகளை வழங்கிய பின்னர் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் அவர்களின் முத்தான திட்டமான கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்குகின்ற திட்டத்தின் விரிவாக்கமாக இரண்டாம் கட்டம் வழங்குகின்ற நிகழ்ச்சி சென்னையில் இன்றையதினம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே தமிழ்நாட்டில் ரூபாய் 1 கோடியே 14 இலட்சம் பேர் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெற்று வருகின்றனர். இன்று முதல் கூடுதலாக 17 இலட்சம் மகளிர் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெற உள்ளனர்.

இத்திட்டமானது 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் 15 ஆம் நாளன்று பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளில் துவங்கப்பட்ட கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் என்பது இரண்டு ஆண்டுகளை கடந்து மிகவும் வெற்றிகரமாக தமிழ்நாட்டு மகளிருடைய வாழ்வில் ஒரு அங்கமாக மாறியுள்ளது. கொரோனா காலத்திற்கு பிறகு தமிழ்நாட்டின் நிதிநிலையை சீர்படுத்தி அதற்கு பிறகு இத்திட்டத்தினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்படுத்தினார்கள். இத்திட்டமானது வெற்றிகரமான திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. பிற மாநிலங்களுக்கு எடுத்துகாட்டாக இத்திட்டம் தமிழ்நாட்டில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. உங்களுடன் ஸ்டாலின் முகாமில் கலைஞர் உரிமைத் தொகை வேண்டி விண்ணப்பம் அளித்த மகளிருக்கு 2வது கட்டமாக இன்றையதினம் கலைஞர் உரிமைத் தொகை 16,525 மகளிருக்கு வழங்கப்பட்டுள்ளது. இதன்படி அரியலூர் மாவட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் 1,74,019 மகளிர் பயன்பெறுகின்றனர்.

ஒரு திட்டத்தினை துவங்கி தொடர்ந்து செயல்படுத்தி வருவது என்பது மிகவும் முக்கியமான தாகும். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இதனை சாதித்து காட்டியுள்ளார்கள். தேர்தல் காலத்தில் அறிவித்த திட்டங்கள் மற்றும் அறிவிக்காத திட்டங்கள் என புது மைப்பெண் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் என பல்வேறு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அவற்றிற்கு மகுடம் வைத்தது போன்ற திட்டம்தான் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டமாகும். இந்த திட்டம் இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இத்தகைய சிறப்பான அளவில் செயல்படுத்தப்படவில்லை. சென்னையில் நடைபெற்ற விழாவில் கலந்துகொண்டு பேசிய இராமநாதபுரம் மாவட்டத்தினை சேர்ந்த வயதான மூதாட்டி கோழிகள், ஆடுகள் வாங்கி வாழ்வதாரத்தை பெருக்கி கொண்டேன் என சொல்லும்போது ஏழை, எளிய மக்களின் வாழ்வில் இத்திட்டம் எத்தகைய புரட்சியை ஏற்படுத்தியுள்ளது என்பதற்கு இதுவே சான்றாகும். தமிழ்நாட்டில் உள்ள மகளிர் முதலமைச்சர் அவர்களை தங்களது சகோதரராக ஏற்றுக்கொள்கின்ற காட்சியை இன்றையதினம் காணமுடிந்தது என தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் 2 ஆவது கட்ட விரிவாக்கத்தின் கீழ் மாதந்தோறும் ரூ.1000 வீதம் கிடை க்கப்பெற்ற பயனாளி நசீஃபா பேகம் என்பவர் தெரிவிக்கையில், நான் அரியலூர் மாவட்டம், செந்துறை ஊராட்சியில் வசித்து வருகிறேன். எனக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர். நான் எங்கள் ஊரில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாமில் கலந்துகொண்டு கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் மாதந்தோறும் உரிமைத்தொகை வழங்ககோரி விண்ணப்பம் அளித்திருந்தேன். இந்நிலையில் எனது விண்ணப்பம் ஏற்கப்பட்டு எனக்கு இன்றையதினம் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தின் கீழ் ரூ.1000 உதவித் தொகை கிடைக்கப்பெற்றுள்ளது. இத்தொகை எனது குழந்தைகளின் கல்வி செலவுகளுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. பெண்களின் பொருளாதார முன்னே ற்றத்தினை முதன்மையாக கொண்டு இத்தகைய சிறப்பான திட்டங்களை செயல்படுத்தி வரும் தமிழ்நாடு அரசுக்கும், முதல மைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன் என நசீஃபா பேகம் என்பவர் தெரிவித்தார்.

இதேபோன்று கலைஞர் மகளிர் உரிமைத்தொகை 2 ஆவது கட்ட விரிவாக்கத்தின் கீழ் மாதந்தோறும் ரூ.1000 வீதம் கிடைக்கப்பெற்ற பயனாளி அருட்செல்வி என்பவர் தெரிவிக்கையில், நான் அரியலூர் ஊராட்சி ஒன்றியம், வாலாஜாநகரம் கிராமத்தில் எனது குடும்பத்தி னருடன் வசித்து வருகிறேன். எங்களது ஊரில் உங்களுடன் ஸ்டாலின் முகாம்கள் நடைபெறுவதாக தன்னார்வலர்கள் மூலம் கையேடுகள் வழங்கப்பட்டதுடன் கலைஞர் மகளிர் உரிமைத்தொகைகாக விண்ணப்பம் அளிக்கலாம் என்பதை அறிந்து கலைஞர் மகளிர் தொகை வேண்டி விண்ணப்பம் செய்திருந்தேன். எனது மனு ஏற்கப்பட்டு இன்றையதினம் எனக்கு ரூ.1000 உரிமைத் தொகை வழங்கப்பட்டுள்ளது. இத்தொகையினை எனது குழந்தைகளின் அத்தியாவசிய தேவைகளுக்கு பயன்படுத்திக்கொள்வேன். பெண்களின் வாழ்வில் முன்னேற்றம் ஏற்படும் வகையில் தொடர்ந்து இத்தகைய திட்டங்களை செயல்படுத்தி வரும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அய்யா அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என அருட்செல்வி என்பவர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் க.ரா.மல்லிகா, உடையார்பாளையம் கோட்டாட்சியர் ஷீஜா, அரியலூர் நகர்மன்றத்தலைவர் சாந்தி கலைவாணன், தனித் துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) த.மனோகரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) பரிமளம், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) பழனிசாமி, உடையார் பாளையம் பேரூராட்சி மன்றத் தலைவர் மலர்விழி ரஞ்சித்குமார், மாவட்ட நிலை அலுவலர்கள், இதர அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



மயிலாடுதுறை மாவட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவல நுழைவு வாயிலில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை சார்பில் அறிஞர் அண்ணா மாரத்தான் ஓட்டத்தை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், மாவட்ட ஆட்சித்தலைவர் எஸ்.ஸ்ரீகாந்த் ஆகியோர் கொடி அசைத்து தொடங்கி வைத்தனர். உடன் நகர்மன்ற தலைவர் குண்டாமணி (எ) என்.செல்வராஜ் மற்றும் பலர் உள்ளனர்.

---

## கரூர் மாவட்டத்தில்

# 19,644 குடும்பத் தலைவிகளுக்கு கலைஞர் மகளிர் உரிமைத் தொகை!

### வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. வழங்கினார்!

கரூர், டிச.15 –

கரூர் மாவட்டத்தில் 19,644 குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1,000 / பெறுவதற்ககான வங்கிப் பற்று அட்டைகளை குடும்பத் தலைவிகளுக்கு கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி வழங்கினார்.

கரூர் அட்லஸ் கலையரங்கில் இரண்டாம் கட்டமாக மகளிர் உரிமைத் தொகை வழங்கும் விழா நடைபெற்றது. சென்னையில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் இத்திட்டத்தை தொடங்கி வைத்ததை அடுத்து, கரூர் மாவட்ட பயனாளிகளுக்கு வங்கிபற்று அட்டைகளை கரூர் சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி வழங்கினார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

கரூர் மாவட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தின் கீழ் முதற்க ட்டமாக 1.69.729 குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கப்பட்டு வருகிறது.

தொடர்ந்து இரண்டாம் கட்டமாக இன்றைய தினம் 19.644 (கரூர் 7.278), (அரவக்குறிச்சி 4,912), (கிருஷ்ணராயபுரம் 3.808). (குளித்தலை 3.646) குடும்ப தலைவிகளுக்கு மாதம் ரூ.1.000 பெறுவதற்கான வங்கிப் பற்று அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் கரூர் மாவட்டத்தில் மொத்தம் 1,89,373 குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ. 1000 வழங்கப்பட்டு வருகிறது.

2021 சட்டமன்றத் தேர்தலில் அளித்த தேர்தல் வாக்குறுதியை நிறை வேற்றும் வகையில், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை மாதந்தோறும் 1000 வழங்கப்படும் என்ற திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடந்த 2023 செப்டம்பர் 15ஆம் தேதி அன்று தொடங்கி வைத்தார்கள். சுமார் 1 கோடியே 6 லட்சம் தாய்மார்களுக்கு மாதந்தோறும் 1,000 வழங்கும் திட்டம்.அதே ஆண்டு நவம்பர் மாதம், விடுபட்டிருந்த சுமார் 7 லட்சத்து 35,000 தாய்மார்களுக்கும் கூடுதலாக வழங்கப்பட்டது.

இதன் மூலம் சுமார் 1 கோடியே 14 லட்சம் தாய்மார்கள் உரிமைத் தொகையைப் பெற்று வந்தனர். ”எங்களுக்கும் விடு பட்டிருக்கிறது. எங்களுக்கும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வேண்டும் என்ற பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று. தமிழ்நாடு முழுவதும் 10,000 முகாம்கள் நடத்தி பெறப்பட்ட விண்ணப்பங்களை ஆராய்ந்து, இன்று தமிழ்நாடு முழுவதும் வி ண்ணப்பித்த 17 லட்சம் தாய்மார்களுக்கு மாதந்தோறும் 1,000 வழங்கும் திட்டம் இணைக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம். தமிழ்நாடு முழுவதும் சுமார் 1 கோடியே 30 லட்சம் தாய்மார்கள் மாதந்தோறும் 1,000 பெறுகின்றனர். தாய்மார்கள் அனைவரும் முதலமைச்சரை அண்ணனாக, தம்பியாக. சகோதரனாக கருதி, அண்ணனின் சீதனமாக மாதந்தோறும் 1.000 வழங்கும் இந்தத் திட்டத்தை மகிழ்ச்சியுடன் பாராட்டி, அவருக்குத் தொடர்ந்து ஆதரவை வழங்கி வருகின்றனர்.

கரூர் மாவட்டத்தில், ஏற்கனவே. சுமார் 1 லட்சத்து 63,000 தாய்மார்களுக்கு வழங்கப்பட்டது. இன்று கூடுதலாக 19,644 தாய்மார்களுக்கு வழங்கப்படுகிறது. மொத்தமாக. கரூர் மாவட்டத்தில் 1 லட்சத்து 69,644க்கும் மேற்பட்ட தாய்மார்கள் பயனடையும் வாய்ப்பை முதலமைச்சர் அவர்கள் உருவாக்கித் தந்திருக்கின்றார்கள்.

இந்தியாவிலேயே ஒரு திட்டத்தை தொடங்கி பின்னர் அதனை விரிவு படுத்தி அனைவருக்கும் வழங்குகின்ற திட்டம் தமிழ்நாட்டில் மட்டுமே செயல்படுத்தப்படுகிறது.

விடுபட்டவர்களையும் இணைத்து உரிமைத்தொகையை தருகின்ற ஒரே முதலமைச்சர் நமது முதலமைச்சர் அவர்கள் தான்.

ஒன்றிய அரசு தமிழ்நாட்டுக்கு தரவேண்டிய நிதிகளை தருவதில்லை.நாம் ஒரு ரூபாய் வரி செலுத் தினால் 29 பைசாவை தமிழ்நாட்டிற்கு திருப்பித் தருகிறது. ஆனால் ஒன்றிய அரசு பாஜக ஆளக்கூடிய மாநிலங்களுக்கு ஒரு ரூபாய் வரி செலுத்தினால் அதிகபட்சம் 7 ரூபாய் வரை ஒதுக்கீடு செய்கின்றன. நமக்கு குறைந்த நிதியை கொடுத்தாலும் கூட முதலமைச்சர் அவர்கள் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றி இது போன்ற திட்டங்களையும் தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றார்கள்.

இவ்வாறு வி.செந்தில் பாலாஜி கூறினார்.

இவ்விழாவில் சட்டமன்ற உறுப்பினர்கள் இரா.மாணிக்கம் (குளித்தலை). ஆர். இளங்கோ (அரவக்குறிச்சி), க.சிவகாமசுந்தரி (கிருஷ்ணராயபுரம்), மாவட்ட வருவாய் அலுவலர் கு.விமல்ராஜ். குளித்தலை சார் ஆட்சியர் சுவாதிஸ்ரீ, மாநகராட்சி மேயர் வெ. கவிதா. துணை மேயர் ப.சரவணன், கரூர் வருவாய் கோட்டாட்சியர் முகமது பைசல், மண்டலக்குழுத் தலைவர்கள் எஸ்.பி. கனகராஜ், வெங்கமேடு சக்திவேல், ஆர்.எஸ்.ராஜா, அன்பரசு மற்றும் வட்டாட்சியர்கள் மோகன்ராஜ். விஜயா, பிரபாகரன், பிரபா, சத்தியமூர்த்தி, ராஜாமணி, இந்துமதி கலந்து கொண்டனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருவாரூர் கு. தென்னன்
### டிசம்பர் 15 (2011)



**தலைவர் கலைஞர் அவர்களின் இளமைக் காலந்தொட்டு உற்ற நண்பராகத் திகழ்ந்தவரும் – கழகம் தொடங்கிய காலம்முதல் உறுப்பினராக விளங்கியவரும் – திருவாரூர் நகர்மன்றத் தலைவர் – நகரக் கழகச் செயலாளர் – தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராகவும் – மாவட்டக் கழக அவைத் தலைவராகவும் பொறுப்புகளை வகித்தவர்.**

**கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.குறிப்பாக, மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.**

**தலைமைக் கழகச் சார்பில் 2000ஆம் ஆண்டு ‘பெரியார் விருதினை’ தலைவர் கலைஞர் அவர்கள் வழங்கிச் சிறப்பித்தார்கள்.**

**“எனக்கு எத்தனையோ நண்பர்கள் உண்டென்ற போதிலும் ‘நண்பன்’ என்ற தகுதியிலே முதலிடத்தில் வைத்துக் கருதப்படும் திருவாரூர் தென்னனை இழந்துவிட்டேன்” என தலைவர் கலைஞர் அவர்கள், தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**